# மூதூர்க்கடலில் பயணிகள் கப்பல் மூழ்கியது

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2024 தை 13 இதழ் 350

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 26 — 01 — 1993

## 50 தமிழர் பலி?

(திருகோணமலை)

திருகோணமலையில் இருந்து மூதூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் 'பாதை' மூதூர்க்கடலில் மூழ்கியதால், அதில் பயணம் செய்தவர்களில் 50 தமிழ்ப் பொதுமக்கள் மரணமடைந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இப்பரிதாபச் சம்பவம், நேற்று பகல் 2-30 மணியளவில் நிகழ்ந்தது. அந்தப் பட

(2-ம் பக்கம் பார்க்க)

## 7 இராணுவமும் நீரில் மூழ்கிப் பலி

(திருமலை)

மூதூர் கடலில் பயணிகள் படகு நேற்று நீரில் மூழ்கிய போது அதில் பயணம்செய்த ஏழுபடையினரும் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக தெரிவிக்கப் படுகிறது.

கடற்படை சுழியோடிகளும் தொண்டர் படையும் நீரில் மூழ்கியவர்களையும், உயிரிழந்தவர்களையும் தேடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனராம். (கி)

## தமிழகம் நேற்று அதிர்ந்தது

# சென்னையில் மூன்று இடங்களில் பாரிய குண்டுகள் வெடித்தன

### காங்கிரஸ் அலுவலகங்கள் சேதம்

(சென்னை)

தமிழக தலைநகர் சென்னையில் நேற்று அதிகாலை பாரிய சத்தங்களுடன் மூன்று இடங்களில் பாரிய குண்டுகள் வெடித்ததில் அரச கட்டிடங்களும், காங்கிரஸ் கட்சி செயலகங்களும் பலத்த சேதமடைந்ததுடன் சென்னை நகரே அதிர்ந்தது. மத்திய, மாநில அரசுகளின் செயல்களை கண்டித்தே இந்தக் குண்டு வெடிப்பு இடம் பெற்றதாம்.

## காந்தியின் சிலை தகர்ந்தது

நேற்று அதிகாலையில் விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில், அந்த அலுவலகம் முற்றாகச் சேதமடைந்ததுடன், அலுவலகத்தின் முன்னால் வைக்கப்பட்டிருந்த மகாத்மா காந்தி சிலையும் தகர்த்தெறியப்பட்டது.

சேலம் மாவட்டம் ஆத்தூரிலும், நாகபட்டினத்துக்கு அருகிலுள்ள குடைவாசல் என்னும் இடத்திலும் உள்ள காங்கிரஸ் கட்சி அலுவலங்களில் இரண்டு குண்டுகள் அடுத்தடுத்து வெடித்ததில், அக்கட்டடங்கள் முற்றாகச் சேதமடைந்தன.

## சென்னை மக்கள் பெரும்பீதி

குண்டுகள் வெடித்த இடங்களில், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான துண்டுப் பிரசுரங்களும் கிடக்கக் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 3-50 மணியளவில் இந்த மூன்று குண்டுகளும் பலத்த சத்தத்துடன் அடுத்தடுத்து வெடித்ததால், ஆழ்ந்த நித்திரையில் இருந்த சென்னை நகர மக்கள் பெரும் பீதியடைந்த நிலையில் வீதிகளுக்கு ஓடி வந்ததாகவும் கூறப்படுகின்றது.

## படைகள் உஷார் நிலையில்

மேற்படி சம்பவங்களினால் தமிழகத்தில் பொலிஸாரும் இராணுவத்தினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும். இந்தியாவின் குடியரசுதினமான இன்று தமிழ் நாட்டில் வன்முறைச் செயல்கள் ஏதாவது ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுவதாகவும் 'ஏஜென்ஸி' செய்திகள் தெரிவித்தன.

## நரசிம்மராவுக்கு அவசர தந்தி

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் நடவடிக்கைகளை ஒடுக்குவதில், பிரதமர் திரு. நரசிமமராவ், தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, அகில இந்தியக் காங்கிரஸ் (ஐ) கட்சிப் பொதுச் செயலாளர் திரு. ஜனார்தன் பூசாரி ஆகியோரின் தலையீட்டைக் கோரி, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அவர்களுக்குத் தந்திகளை அனுப்பி வைத்துள்ளது.

## தமிழ் விடுதலைப்படை காரணம்

கேணல் கிட்டு, இந்திய அரசின் சதியால் உயிர் நீத்ததைக் கண்டித்து, இக்குண்டு வெடிப்புக்களுக்குத் தாமே பொறுப்பு என ரி. எல். ஏ. எனப்படும் 'தமிழ் விடுதலைப் படை உரிமை கோரியுள்ளது. இந்த இயக்கம், தமிழ்நாட்டைத் தனி நாடாக்கும் கொள்கையைக் கொண்டதென்றும், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானது என்றும் தெரிவிக்கப் படுகிறது. இது தடைசெய்யப்பட்ட அமைப்பாகும்.

## பொலிஸார் கடும் எச்சரிக்கை

தமிழ் தீவிரவாதக் கும்பலே இதற்கு காரணமென தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குடியரசு தினத்திற்கு முன் இத்தகைய கும்பல்கள் இம் மாதிரியான செயல்களில் ஈடுபடுவது இயல்பு எனவும் இதற்காக பீதியடையவேண்டாம் எனவும் தமிழக பொலிஸார் மக்களை கேட்டுள்ளனர். மேலும் இவ்வாறான சம்பவங்கள் குறித்து மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியா எங்கும் பலத்த பாதுகாப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் 45வது குடியரசு தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி இந்தியா எங்கும் பலத்த பாதுகாப்புபோடப்பட்டுள்ளதுடன் முப்படைகளும் உஷார் நிலை

(2-ம் பக்கம் பார்க்க)

## நெடுமாறன் வழக்குத் தாக்கல்

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டுவின் கப்பலில் வந்து இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ஒன்பது கப்பல் சிப்பந்திகளையும் விடுதலை செய்யுமாறு தமிழ் தேசிய இயக்கத் தலைவர் திரு. ப. நெடுமாறன் சென்னை உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்

(2-ம் பக்கம் பார்க்க)

## கப்பல் சிப்பந்திகள் சென்னை வருகின்றனர்

(சென்னை)

"எம் வி. அகத்' கப்பலில் வந்து பின் இந்திய கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 9பேரும் இன்று அல்லது நாளை சென்னை கொண்டுவரப்படவுள்ளனர்.

(2-ம் பக்கம் பார்க்க)

## தி.மு.க. வினர் நேற்று சென்னையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

தமிழகத்தில் தொலைக்காட்சி நிலையங்கள் மற்றும் அஞ்சல் நிலையங்கள் முன்னால் நேற்று திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், திராவிடக் கழகத்தினரும் பெரும் ஆர்ப்பாட்

(2-ம் பக்கம் பார்க்க)

## இவ்வாரத்தில் 38 படையினர் பலி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ லங்காப் படையினர் மீது விடுதலைப் புலிகள் இந்த வாரத்தில் நடத்திய தாக்குதலில் 38க்கும் மேற்பட்ட

(2-ம் பக்கம் பார்க்க)

## கண்டனப் பேரணியும் பொதுக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

கேணல் கிட்டு உட்பட பத்துப் போராளிகளின் வீரச் சாவுக்குக் காரணமான இந்திய அரசின் மேலாதிக்க உணர்வைக் கண்டித்தும் வீரச்சாவடைந்த போராளிகளுக்கு

(2-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


**முடக்கொத்தான் குளிகை**

முடக்கொத்தான் இலையில் தயாரித்த Welpenla Capsules கிடைக்குமிடம்:- எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(சி-7095)

**வைத்தியம்**

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சரும நோய்கள், யாதவிடாய்க் குத்து. இரத்தப்போக்கு வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். (சி-7119)


## பிரிக்கப்பட்ட கடிதங்கள்

(அரியாலை)

குமாரியில் வந்த தபாற் பொதிகளில் ஏராளமான கடிதங்கள் பிரிக்கப்பட்டுவந்துள்ளன. அவைகள் தபாலதிரிஞன் வீட்டு முகவரிக்கு துண்டுகள் அனுப்பப்பட்டுள்ளன. பிரதம தபாற் நிலையத்தில் அந்தக்கடிதங்களைப் பெறலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (59)


## தொழில்நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம்
## கல்வியாண்டு - 1993

மேற்படி கல்வியாண்டின் முதலாம் தவணை 1993-02 01ம் திகதி ஆரம்பமாகும் சகல விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள் யாவரும் அத்திகதியிலிருந்து சமுகமளிக்குமாறும், மாணவர்கள் 1993-02-08ம் திகதி தொடக்கம் வகுப்புகளுக்கு சமுகமளிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

அதிபர்.

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
25-01-1993 (எ-2821)


## வருடாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்தப்பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 31ம் திகதி காலை யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் தலைவர் எஸ். ரி. குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வருடம் பல புதிய கழகங்கள் மேற்படி லீக்கில் சேர்ந்து கொள்வதற்கு விண்ணப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (வி)


## அறிவித்தல்

அண்மையில் கிளாலி ஏரியில் இடம்பெற்ற சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை இலவச சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர். பாதிக்கப்பட்டோரின் உறவினர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இணைப்பாளர்
சட்ட உதவிப்பிரிவு
இ. நீ. ச. இயக்கம்
6. அலோ அவெனியு
கொழும்பு-03 (எ- 2314)


## மூதூர் கடலில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கில் 110 பேர் பயணம் மேற்கொண்டிருந்தனர் என்றும், பெரும் காற்று வீசியதாலும் காலநிலை சீரின்மையாலும், அதிகமான பயணிகள் சென்றதாலும் படகு நீரில் மூழ்கியதாம்.

இவர்களில் 60 பேரைக் கடற்படையினர் காப்பாற்றி, திருமலை கடற்படை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக 30 பேரை அனுமதித்தனர்.

இதுவரை 15 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி-சு)

## நெடுமாறன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர்கள் திரு. வெங்கடசாமி, திரு. சுவாமிதுரை இது குறித்த மத்திய பாதுகாப்பு மற்றும் இந்திய உள்துறை அமைச்சுக்கும், தமிழக காவல் துறைக்கும் நோட்டீஸ் அனுப்ப நேற்று உத்தரவிட்டுள்ளனர்.

சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல் வழிமறிக்கப்பட்டு அதில் வந்த தலைவர்கள் கைது செய்யப்பட்டதாக திரு. நெடுமாறன் தமது மனுவில் கூறியிருந்தார்.

ஆனால் இந்த கப்பல் இந்திய கடற்பகுதியில், சென்னைக்குக் கிழக்கே 12 கி. மீற்றர் தொலைவிலும், திருமலைக்குக் கிழக்கே 20 கி மீற்றர் தொலைவிலும் கண்டுபிடிக்கப்பட்டதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருந்தது.

மேற்படி அறிக்கையையும் திரு. நெடுமாறன் எதிர்த்து தமது மனுவில் குறிப்பிட்டுள்ளதுடன் இந்த விடயங்களை, இந்தியப் பாதுகாப்பு அமைச்சு திரித்துக் கூறியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (சி)

## வெற்றிடங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் காலியாகவுள்ள பௌதீகவியல் விஞ்ஞான பீடத்திற்கான வெற்றிடங்களை நிரப்புமாறு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ் பல்கலைக்கழகத்திற்கு அறிவித்துள்ளது. (159)

## கப்பல் சிப்பந்திகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களை சென்னைக்குக் கொண்டுவருவதற்காக மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் ஆந்திராவின் விசாகபட்டினத்திற்குச் சென்றுள்ளனர்

இத்தகவலை மத்திய புலனாய்வுத்துறைப் பொறுப்பதிகாரி டி ஐ ஜி. கார்த்திகேயன் தெரிவித்துள்ளார். (சி)

## தி.மு.கவினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் செய்தனர்.

தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்புவது குறைக்கப்பட்டு, இந்தி நிகழ்ச்சிகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்தே இந்த ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.

சென்னையில் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மகன் ஸ்டாலின் தலைமையில் தி.மு.க.வினரும், திரு ஆனூர் ஜெகதீசன் தலைமையில் திராவிடக் கழகமும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். (சி)

## இந்தியா எங்கும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இன்றைய தினத்தை கறுப்புதினமாக அனுஷ்டிக்குமாறு முஸ்லிம் தலைவர்கள்விடுத்த அழைப்பே பலத்த பாதுகாப்பிற்கு காரணமாயுள்ளதாம்.

முஸ்லிம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சமும் எழுந்துள்ளதாம். இன்றைய குடியரசு தின கொண்டாட்டத்தில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஜோன் மேயர் கலந்துகொள்வதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## நெல் விளைச்சல் குறைவு

(அரியாலை)

வடமராட்சிப் பகுதியிலுள்ள கரவெட்டி நெல்லியடி பகுதிகளில் இம்முறை சிறுபோக வேளாண்மை நெல் விளைச்சல் முன்னைய காலங்களைவிட மிகவும் குறைவாக உள்ளதாக தெரியவருகிறது. (59)

## இவ்வாரத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் இறந்துள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

அவற்றின் விபரம்வருமாறு: முல்லைத்தீவில் 5 படையினர், புல்மோட்டையில் ஒரு அதிகாரி உட்பட 14 படையினர், திருகோணமலை சிற்றுறில் 14 இராணுவத்தினர், செட்டிகுளத்தில் நான்குபேரும், பொலநறுவை அம்பலவியயில் ஒரு சிப்பாயும் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (சு)

## கண்டன


(1 ம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சலி செய்யும் முகமாகவும் தமிழீழ கலை இலக்கிய, பத்திரிகையாளர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து நாளை கண்டன ஊர்வலத்தையும்பொதுக் கூட்டத்தையும் நடாத்தவுள்ளன.

பி. ப. 2-00 மணிக்கு நாச்சிமார் கோவிலடியில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் யாழ்/பல்கலைக் கழகம் வந்தடைந்ததும் 3-00 மணிக்கு பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் அஞ்சலிக் கூட்டம் ஆரம்பமாகும்.

பத்துக்கும் மேற்பட்ட கலை இலக்கியப் பத்திரிகையாளர் அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கமும் உரையாற்றுவர். இதனைத் தொடர்ந்து நாதஸ்வரக் கலைஞர்களின் நாத அஞ்சலி நிகழ்வும், வயலின் கலைஞர்களின் நாதகான அஞ்சலி நிகழ்வும், யாழ். நாடக அரங்கக் கல்லூரியினரின் 'அமைதி தேடி வந்த புறா சிறகிழந்தது' என்ற கவிதா நிகழ்வும் இடம் பெறுகின்றது. (சி)


## ஓராண்டு நினைவஞ்சலி



## கனகர் பொன்ராசா

(உரிமையாளர், பொன்ராசா மோட்டார் பயிற்சிசாலை மனோரஞ்சிதா ரூர்ஸ் கொம்பனி லிமிட்டெட்)

மலர்வு: 30-09-1930 உதிர்வு: 07-02-1992

திதி: 26-01-1993

எங்கள் இதயத்தில் என்றும் ஒளிவீசி நிலைத்து நிற்கும அன்புத் தெய்வமே! எதிர்பாராது எம்மை விட்டு நீங்கினீரே, ஆறுது ஆறுது அப்பா. துயர் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பொ. குணசேகரம்.
82, பருத்தித்துறைவீதி.
யாழ்ப்பாணம். (சி 7168)

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன்
அவர்கள்

சிந்தா மூலம் தந்த
ஏழாம் ஆண்டு இன்று
எம் தலைவா நும்
சிந்தனையிலே வந்தனை
செய்கின்றோம்
மனை மணிப்பாகனே
தணியா தெம் நினைவு
அம்பிகை எம்பிரானே
எம் நெஞ்சில் வாழ்க
நிரந்தரம்

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"மணி மனை"
மல்லாகம். [எ 2805]

# பழநிகோவில்பிரசித்திபெற்ற

## மூலவர் முருகன் விக்கிரகத்தின் மகத்துவம்

தமிழ் நாட்டிலுள்ள முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்றானதும் லட்சோப லட்சம் பக்தர்களின் பக்திப்பரவசக் குரல்கள் அனுதினமும் எதிரொலித்துக் கொண்டிருக்கும் திருத்தலமுமான பழனி முருகன் கோவிலின் மூலவர் முருகன் விக்கிரகம் பற்றிய விவகாரம் பெரும் சர்ச்சைக்குரிய தொன்றாகி விட்டது. சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு......பதினெட்டு சித்தர்களில் குறிப்பிடத்தக்கவரான ''போகர்''. என்பவர் 64 பாஷணங்களை ஒன்பதாக இறுக்கிச்செய்த 'நவபாஷணக் கட்டுத்தான் மூலவர் என்று மகிமைபெற்ற அந்த தண்டாயுதபாணி விக்கிரகம் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

சித்தர்களைத் தவிர வேறு எவராலும் சிருஷ்டிக்கமுடியாத இந்த மூலவர் விக்கிரகத்தின் மகத்துவம் வர்ணிக்க முடியாதஒன்று. நவபாஷணத்திலான அந்த விக்கிரகத்தின் மீது அபிஷேகம் செய்து வழங்கப்படும் பிரசாதங்கள் மனிதர்களின் சகல வியாதிகளையும் தீர்த்து குன்று இளமையுடன் வாழவைக்கும் சக்தி மிக்கவை என்றே பக்தர்கள் பரவசத்துடன் குறிப்பிடுகின்றார்கள். அத்துடன் இராக்கால அபிஷேகத்தின்போது விக்கிரகத்தின் மீது போர்த்தப்படும் சுத்தமான சந்தனம் விக்கிரகத்தின் மீது கூடியும் சக்திமிக்க நீரை உறிஞ்சுகின்றது என்றும் கூறப்படுகின்றது. இதனால் வெளிர் மஞ்சல் நிறத்திற் போர்த்தப்பட்ட சந்தனம் கறுப்பு நிறமாக மாறி விடுவதாகவும் சித்த வைத்தியத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ள 4448நோய்களுக்கும் அருமருந்தாக பயன்படுத்தப்படுவதாகவும் அறிய வருகின்றது. இந்த ஐயாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த விக்கிரகம் தேய்ந்துபோய்விட்டதாகவும் உறுப்புகளில் பல சேதமடைந்து விட்டதாகவும் விக்கிரகம் விழுந்துவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் உச்சநீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவொன்று விக்கிரகத்தை பார்வையிட்டு அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்துளளது.

அண்மையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நடைபெற்ற கோவில் நிர்வாக வாரியக் கூட்டத்தில் இந்த மூலவர் விக்கிரகத்தை அகற்றி விட்டு கருங்கல்லிலான புதிய விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்யவேண்டும் என்று தீர்மானித்துள்ளது.

இச்செய்தி அறிந்தவுடன் பழனி பகுதி மட்டுமன்றி தமிழகமே பீதி கலந்த பரபரப்புக்குள்ளானது. ஆளும் கட்சியுடன் நெருக்கமான தொடர்புடைய இரு தொழில் அதிபர்கள் ஏற்கனவே ஒரு முருகன் சிலையை வடிவமைத்து காத்திருக்கிறார்கள் என்றும் தற்போதுள்ள நவபாஷண மூலவருக்கு பதிலாக தங்களுடைய விக்கிரகத்தை வைத்து ''பாரம்பரிய புகழ்'' தேடிக்கொள்ள தீவிரமாக முயற்சி செய்வதாகவும் அரசு புதிய விக்கிரகம் அமைப்பதற்கு துடிப்பதற்கு இந்த அரசியல் பின்னணியும் ஒரு காரணம் என்றும் கூறப்படுகின்றது. இதேவேளை காஞ்சி பரமாச்சாரியாரும், சிருங்கேரி சங்கராச்சாரியாரும், பிற மடாதிபதிகளும், சமய அறிஞர்களும் தற்போதுள்ள மூலவர் விக்கிரகத்தை மாற்றக் கூடாது என்றுகுரல்கொடுத்து வருகின்றார்கள். அரசு மேற்கொண்டுள்ள மூலவர்விக்கிரக மாற்றம் முடிவுக்கும் சித்தாகம விதிகளுக்கு புறம்பான செயற்பாடுகளுக்கும் உலகெங்கணுமுள்ளபக்தர்கள் மிக வன்மையான கண்டனங்களை தெரிவித்துவருவதாக அறியப்படுகின்றது.

நன்றி: ஆனந்த விகடன்

(72)

# 'மொழிப்பிரச்னையால் குழப்பநிலை ஏற்பட்டது'

(கொழும்பு)

மக்களை ஏமாற்றி அவர்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக 1956ல் மொழிப்பிரச்னை தோற்றுவிக்கப்பட்டது.

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாசா அவிசாவளையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசினார்.

அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது:- இந்தமொழிப் பிரச்னையால் நாட்டில் குழப்ப நிலை ஏற்பட்டது அந்தக் காலம் தொட்டு இலங்கையின் வருமானம் வீழ்ச்சி அடைந்து வருகின்றது. இதன் தாக்கத்தை இன்றும் நாம் அனுபவித்து வருகின்றோம் என்றார். (சு)

# கட்டாக்காலி நாய்களை அழிக்க நடவடிக்கை

(புலோலி)

வடமராட்சிப் பகுதியில் உள்ள நகரசபைகள் பிரதேச சபைகள் கட்டாக்காலி நாய்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

அவ்வப்பகுதி பொதுசுகாதாரப்பரிசோதகர்களின் அனுசரணையுடன் மேற்கொள்ளப் படவுள்ள இந் நடவடிக்கைகளுக்கென கூடுபோல் அமைக்கப்பட்ட வண்டிகளை இச் சபைகள் தற்போது கொள்வனவு செய்துவருகின்றன.

வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்களை பிடித்து அழிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (61)

புதுடில்லியில் —

# பாரிய குண்டுவெடிப்புகள் தடுக்கப்பட்டன

(புதுடில்லி)

சீக்கியப் போராளிகள் 4பேரை நேற்று முன்தினம் புதுடில்லிப் பொலிசார் கைது செய்ததன் மூலம் புதுடில்லியில் இன்று குடியரசு தின வைபவங்களின்போது நிகழவிருந்த பெரும் குண்டுவெடிப்பு தடுக்கப்பட்டுள்ளதாக புதுடில்லிப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

குடியரசுதின இராணுவ அணிவகுப்பின்போது தூர இயக்கிக் கருவிமூலம் அரச கட்டிடங்களை தகர்க்க மேற்படி நால்வரும் திட்டமிட்டிருந்தமை தெரியவந்துள்ளதாகவும் இவர்களிடமிருந்து ஒரே சமயத்தில் பல இடங்களில் வெடிக்கப் பயன்படுத்தப்படும் வெடி சாதனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் குடியரசு தின வைபவங்களில் பங்குபற்றுமுகமாக பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் இந்தியாவுக்கு விஜயம் செய்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# கார் குண்டு வெடிப்பு பத்திரிகையாளர் பலி

(லண்டன்)

துருக்கியின் பிரபல பத்திரிகையாளர் ஒருவர் நேற்று முன்தினம் இடம்பெற்ற கார் குண்டு வெடிப்பு ஒன்றில் பலியானார்.

உக்கூர் முன்கூமீ என்ற பத்திரிகையாளரே கார்க்குண்டு வெடிப்பில் பலியானவராவர்.

முஸ்லிம் அடிப்படை வாதிகளுக்கு எதிராக இவர் பல கட்டுரைகள் எழுதியதாகவும் இவரது படுகொலையில் மேற்படி அமைப்பும் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனவும் புலனாய்வு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (க)

# இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று 26ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3-00 மணிக்கு ''திராவிட மொழி ஆய்வின் இன்றைய நிலையில் தமிழ் – யப்பானிய ஒப்பீடு' என்ற தலைப்பில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சண்முகதாஸ் பேருரை நிகழ்த்துவார். (சு)

பங்களாதேஷ் —

# எதிர்க் கட்சி தலைவி மயிரிழையில் தப்பினார்

(டாக்கா)

பங்களாதேஷின் சிட்டாகொங் நகரில் நேற்று முன்தினம் ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது பங்களாதேஷ் எதிர்க்கட்சித் தலைவி ஷேக் ஹஸினா பேகம் மயிரிழையில் உயிர் தப்பினார்.

அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்ற போதே மேற்படி துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றதாகவும் இதன் போது 50 பேருக்கு மேல் காயமடைந்துள்ளனரெனவும் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஜமாய்த் இஸ்லாமிய அடிப்படைவாதிகளும் ஆளும் தேசியக்கட்சியுமே இச்சம்பவத்திற்கு பொறுப்பு என எதிர்க்கட்சித்தலைவி ஷேக் ஹஸினா பேகம் குற்றம் சாட்டியுள்ளார். (க)

# யாழ். நகரில் இரு பாடசாலைகளில் திருட்டு

(கொழும்புத்துறை)

யாழ். நகரில் திருட்டுச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

யாழ் ஆனைப்பந்தி இலுப்பையடிச்சந்தியிலுள்ள டாக்டர் ஒருவரது வீட்டில் இருந்து ''வில்லியேர்ஸ்'' ரக நீரிறைக்கும் இயந்திரம் ஒன்று இனம் தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளது.

யாழ். ஜோன் பொஸ்கோ பாடசாலையில் இருந்தும் சில பெறுமதி மிக்க பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் 4 வாளிகள், 5 லீற்றர் மண்ணெண்ணெ, 5 மண்வெட்டிகள் திருடப்பட்டுள்ளன.

இதேசமயம் கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் வாசிகசாலை நூல்நிலையத்தில் பல பெறுமதி வாய்ந்த புத்தகங்கள் உட்பட நிலையப் பெரிய விளம்பரப் பலகையும் களவாடப்பட்டுள்ளன. (154-56)

கிளிநொச்சியில்

# கொடும்பாவி எரிப்பு

(கிளிநொச்சி)

கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் வீரச்சாவுக்குக் காரணமாக இருந்த இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஆகியோரின் கொடும்பாவிகள் கடந்த 20ம் தேதி கிளிநொச்சியின் வீதிகளால் இழுத்துச் செல்லப்பட்டு கிளிநொச்சி பஸ்நிலைய முன்பாக வைத்து தீமூட்டி எரிக்கப்பட்டது. (83)

# இராசி பலன்

26-01-1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு தை 13)

சதுர்த்தி முழுவதும், சதயம் மு. ப. 9-21 வரை, மரணயோகம் இராகுகாலம் மாலை 3-36 முதல் 5-6 வரை சுபநேரம் காலை 11-06 முதல் 12-36 வரை.

மேஷம் தன்தான்ய விருத்தி காரிய ஜயம், பந்துவரத்து.

இடபம்: பொதுத்துறை ஈடுபாடு. மனச்சந்தோஷம், பணவரவு.

மிதுனம்: எதிலும் இடையூறு, மனக்குமுறல், வேண்டாத பகை.

கடகம்: பெண்டிர் கலகம், சகோதர பகை, வீண் அலைச்சல்

சிங்கம்: பிறருக்கு உதவுதல், தொழில் பாராட்டு, புதிய உறவு

கன்னி: குடும்ப உல்லாசம், இனசன வருகை சுபகாரியம்.

துலாம்: எதிர்பாராத துன்பம், மனக்கவலை, அஜீரணக் கோளாறு.

விருச்சிகம்: நம்பிக்கை இழத்தல், கடின வாக்கு, பயப்பயம்.

தனுசு: புதிய இடம் கிடைத்தல். தொழில் சிறப்பு, விருந்து வைபவம்.

மகரம்: வியாதியால் சோகம், தாழ்ந்தநிலை, தொழில் நஷ்டம்.

கும்பம்: பணப் புழக்கம், புத்திர சௌக்கியம், மித்திரர் உதவி.

மீனம்: முட்டி மோதல், தொழில் பாதிப்பு, வெறுப்பு.

- ஜோஸ்யர்

# குமணவில் தபால் பொதிகள் அனுப்ப முயற்சி

(கொழும்பு)

பருத்தித்துறை நோக்கி வருவதற்கென குமண கப்பல் கொழும்பில் பொருட்களை ஏற்றிக்கொண்டிருக்கிறது. இக் கப்பலில் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, சீனி என்பவற்றுடன் அப்பியாசக் கொப்பிகளும் தபால்பொதிகளும் ஏற்றப்படுவதாகவும் தெரியவருகின்றது

அரச அதிபரின் முயற்சியால் இம்முறை யாழ். மாவட்டத்திற்கென கூடியளவு அரிசி ஏற்றப்படுவதாகவும் தெரியவருகிறது. அத்துடன் தேங்கிக் கிடக்கும் தபால் பொதிகளையும் குமணவில் அனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொருட்களை ஏற்றிக் கொண்டிருக்கும் குமண அடுத்த வார ஆரம்பப் பகுதியில் பருத்தித்துறையை சென்றடையுமென எதிர்பார்க்கப் படுகிறது. (158)

இந்துக்களின் —

# புனித பிரதேசங்களை விட்டு இராணுவம் விலகவேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் உள்ள இந்துக்களின் புனித பிரதேசங்களிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவம் விலகவேண்டும். இதற்காக உலகளாவிய ரீதியில் போராட்டங்களை இந்து சமயப் பேரவை நடாத்தி வைக்கவேண்டும்.

நல்லை ஆதீன கலா மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்து சமயப் பேரவையின் கருத்தரங்கிற்கு தலைமை வகித்த மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்: வடக்கு-கிழக்கில் நூற்றுக்கணக்கான இந்து ஆலயங்களை ஸ்ரீலங்கா அரசு குண்டு வீசி அழித்துள்ளது. பிதிர்க்கடன்களை இந்துக்கள் நிறைவேற்ற முடியாதவாறு புனித தீர்த்தக் கேணிகளை ஸ்ரீலங்கா அரசு ஆக்கிரமித்துள்ளது.

ஸ்ரீலங்கா அரசு இந்து ஆலயங்களை அழிப்பதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

கண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரை வாற்றுகையில்: எமக்கு எத்தகைய பலம் உள்ளபோதும் ஆத்மபலம் இல்லாவிட்டால் எமது வாழ்வுவளம் பெறமுடியாது என்று

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் பேசுகையில் எமது கலை கலாச்சாரங்கள் காப்பாற்றப் படவேண்டுமானால் இந்து ஆலயங்கள் பேணிப்பாதுகாக்கப்படவேண்டும் என்றார். (க)

### சிறுவர் விடுதி

புலோலி

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான விடுதி (வாட்) ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (61)

# வன்னியில் 9 காவலரண்கள் தகர்ப்பு

# 4 படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பகுதியிலுள்ள முதலியார் குளம் என்ற இடத்தில் அமைந்துள்ள இராணுவ தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் அதிரடியில் ஒன்பது காவலரண்கள் கைப்பற்றப்பட்டன.

முப்பது நிமிடநேரம் இடம் பெற்ற இத் தாக்குதலில் 4 படையினர் பலியானார்கள்.

நேற்று அதிகாலை 12-45 மணியளவில் விடுதலைப்புலிகள் இந்த அதிரடித்தாக்குதலை நடத்தினார்கள்.

காவலரண்கள் புலிகளால் தாக்கப்பட்டபோது நேரிய குளம் இராணுவ முகாமிலிருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினர் புலிகளின் மற்றொரு அணியால் தாக்கி விரட்டப்பட்டனர்.

தொடர்ந்து செட்டிகுளம் தந்திரிமலை முகாம்களிலிருந்து படையினர் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினார்கள்.

இத்தாக்குதலில் 203 ரக பிஸ்டல்-1, ரி 56 ரகதுப்பாக்கி -1, அதற்குரிய ரவைக் கூடுகள்-3, ரி 81 ரக துப்பாக்கி-1, அதற்குரிய ரவைக்கூடுகள்-5, நடுத்தர ரவைகள்-1146, 40 மி. மீ ஷெல்கள்-12, ஜே ஆர் கைக்குண்டுகள்-2, தொலைநோக்கி-1, ரவைக்கூடுதாங்கி அணிகள்-2, மழைக்கவசஅணி 1, போக்கஸ் மின் விளக்கு-1 ஆகியன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. (ரீ)

## ஹெலி ரோந்து

(பண்டத்தரிப்பு)

வலி-வடக்கு, வலி-மேற்கு தென்மராட்சிப் பகுதிகளில் நேற்று முற்பகலும், நண்பகலும் ஹெலிகொப்டர் அடிக்கடி பறந்து ரோந்துசுற்றியது. யாழ். கரையோரப்பகுதி உட்பட நகரின் பெருமளவு குதியையும் மற்றும் மானிப்பாய், அரியாலை, நாவற்குழி, சாவகச்சேரிப் பகுதியையும் சுற்றி இந்த ஹெலி வட்டமிட்டது. (59-56-72-கி)

## சிப்பாய் பலி

(பொலநறுவ)

பொலநறுவ மாவட்டத்திலுள்ள மாதுருஓயாவில் அம்பலவெல கிராமத்தில் கடந்த கிழமை புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டார்.

ஏனைய சிப்பாய்கள் தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரீ)

## திருமலை, வன்னி மோதலில்

# 7 புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

திருமலையிலும், வவுனியாவிலும் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதல்களில் 7 விடுதலைப் புலிகள் வீரச் சாவு அடைந்தனர்

திருமலையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதலில் 2ம் லெப் வேணுச்செல்வன் அல்லது சுரன் (பொன்னையா அரசரட்ணம், துறை நீலாவணை), 2ம் லெப். பிரந்தன் அல்லது சோழன் (மாணிக்கப்போடி சோமசுந்தரம், குருக்கள்மடம்), வீரவேங்கை சத்தியசாமி அல்லது புவிராஜ் (சத்தியமூர்த்தி பகீரதன், கல்முனை-அம்பாறை) ஆகியோரும், வவுனியா செட்டிகுளம் பகுதியில் நேற்று இடம் பெற்ற மோதலில், கப்டன் ரவிச்சந்திரன் (சுப்பிரமணியம் ஆனந்தன், ஓமந்தை) லெப். பிரதீப் (துளசிதாஸ் திருக்கேதீஸ்வரன், மடுக்கோயில்), லெப். சர்மிலன் (இராசையா இராசநாயகம், சேமமடு, 2ம் லெப் குணபாலன் அல்லது ராஜன் (இராமலிங்கம் ஆனந்தகுமார் இரணைமடுச் சந்தி ஆகியோர் வீரச் சாவு அடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (ரீ)

## கடற்படைக்கு அஞ்சி

# கடலில் குதித்த பெண் சங்கிலியை இழந்தார்

(நெல்லியடி)

"கடற்படையின் தாக்குதலுக்கு அஞ்சிக் கடலில் குதித்தபோது, எனது தங்கச் சங்கிலியையும் மற்றும் சில பொருட்களையும் கடலில் இழந்தேன்"

இவ்வாறு கடந்த 24ம் திகதி இரவு கிளாலிக் கடற்பரப்பில் படகில் சென்றவேளை, கடற்படையின் தாக்குதலுக்கு அஞ்சிக் கடலில் குதித்து பின்னர் கடற் புலிகளின் உதவி மூலம் கரை சேர்ந்த வடமராட்சியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "கடந்த 24ம் திகதி இரவு நானும், வேறு சில பிரயாணிகளும் கிளாலிக் கடலில் சென்று கொண்டிருந்தோம். எமக்கு முன்பாக வேறு சில படகுகள் சென்று கொண்டிருந்தன. திடீரெனக் கடற்பரப்பில் வந்த கடற்படையினர் படகுகளை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்க ஆரம்பித்தனர். அவ்வேளை பாதுகாப்புக் கருதி நானும் வேறு சில பயணிகளும் கடலில் குதித்தோம். சில நிமிட நேரம் கடலில் தத்தளித்த எம்மை, விடுதலைப் புலிகளின் கடற் புலிகள் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

"நான் கடலில் குதித்த வேளையில், எனது கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியையும் வேறு சில பொருட்களையும் கடலில் இழந்தேன்" என்றார். (160 சி)

## தமிழகம் நேற்று அதிர்ந்தது (1ம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகள் ஆதரவுப் பிரசுரங்கள்

குண்டு வெடிப்புகள் நடந்த இடங்களில், இந்திய அரசையும், தமிழக அரசையும் கண்டிக்கும் சுவரொட்டிகள் பல காணப்பட்டன. காவிரிப் பிரச்னை குறித்த நீதிமன்ற இடைக்கால உத்தரவை அமுல்படுத்துவது உட்பட 20 கோரிக்கைகள் மேற்படி சுவரொட்டிகளில் இடம் பெற்றுள்ளன குண்டு வெடித்த இடங்களில், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரசுரங்கள் பலவும் கண்டெடுக்கப்பட்டனவாம்.

### முக்கிய இடங்களில் தீவிர பாதுகாப்பு

இந்த குண்டு வெடிப்புச்சம்பவத்தையடுத்து தமிழகத்தின் சகல பகுதிகளிலும் ரயில் தண்டவாளங்கள், பாலங்கள் மற்றும் முக்கிய பகுதிகளில் தீவிர ரோந்து நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். மேலும் தமிழக அரசுக்கட்டிடங்கள் அலுவலகங்கள் முக்கிய இடங்களிலும் காங்கிரஸ், அ. தி. மு. க. கட்சி அலுவலகங்களிலும் பலத்த பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

### புலிகளை ஆதரித்தே குண்டு வெடிப்பாம்

இந்திய அரசும். தமிழக அரசும் இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளை தடை செய்ததற்கும் அதன் ஆதரவாளர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதற்கும் கிட்டு உட்பட 10போராளிகளின் மரணத்திற்கு காரணமாக இருந்ததற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே இக்குண்டுவெடிப்புகள் நடத்தப்பட்டது என்று குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடங்களில் காணப்பட்ட கையால் எழுதப்பட்ட துண்டுப்பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரசின் கூற்று பொய்யாகிவிட்டது

இக்குண்டு வெடிப்புகள் தமிழகத்திலிருந்து புலிகளின் நடவடிக்கைகள் அறவே ஒழிக்கப்பட்டுவிட்டதாக கூறும் தமிழக அரசின் கூற்றை பொய்யாக்கிவிட்டதாக தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார். புலிகளின் ஆதரவாளர்கள் தமிழகத்தில் மிகவும் ஒருங்கிணைந்தமுறையில் செயல்பட்டு வருவதினையும் சக்திவாய்ந்த தொடர்பு கட்டமைப்புகள் அவர்களிடம் இருப்பதினையும் இச்சம்பவங்கள் எடுத்துக்காட்டுவதாகவும் அவர் கூறினார்.

### தமிழக அரசு மீது கண்டனம்

விழுப்புரத்தில் காந்தி சிலை, குண்டு வெடிப்பில் தகர்க்கப்பட்ட சம்பவத்திற்கு தமிழக ஜனதாக்கட்சி தலைவி திருமதி சந்திரலேகா பலத்த கண்டனம் தெரிவித்துள்ளதுடன், தமிழக அரசு புலிகள் விடயத்தில் மெத்தனமாகவே நடந்து வருகிறதென இந்தச் செயல் நிரூபித்துவிட்டதாக கூறியுள்ளார். இவற்றை செய்தவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு கடுமையாக தண்டிக்கப்படவேண்டுமெனவும் புலிகளை ஒடுக்குவதில் தமிழகஅரசு தீவிர கவனம் செலுத்த வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

### புலிகளைப் போற்றி சுவரொட்டிகள்

இதேவேளை விடுதலைப்புலிகளைப் போற்றி சென்னையிலும் மற்றும் பல நகரங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. கிட்டுவுக்கு வீரவணக்கம் செலுத்துவதாக பல்வேறு இடங்களிலும் பலவேறு சுவரொட்டிகள் பெரிய அளவில் கிட்டுவின் உருவப் படங்களுடன் ஒட்டப்பட்டுள்ளன. மேலும் இது போன்ற துண்டுப்பிரசுரங்கள் பலவும் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றை அகற்றும் முயற்சியில் பொலிசார் கடந்த சில தினங்களாக ஈடுபட்டு வருகின்றனர்.

### பாட்டாளி கட்சி நாளை பெரும் பேரணி

கேணல் கிட்டு உட்பட 10 போராளிகள் உயிரிழந்ததற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் பாட்டாளி மக்கள் கட்சி நாளை 27ம் திகதி தமிழகத்தில் அனுதாப ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளதாக கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ் நேற்று தெரிவித்தார்.

### ஊர்வலம்மீது பொலிஸ் சூடு: பலர் காயம்

மதுரை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகவும், தளபதி கிட்டுவுக்கு அஞ்சலி செலுத்தியும் நேற்றுக்காலை நடந்த ஊர்வலம் மீது பொலிசார் சுட்டதில் பலர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் சிலர் ஆபத்தான நிலையிலிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த ஊர்வலத்தில் சென்ற மக்கள் கூட்டம் புலிகளுக்கு ஆதரவாகவும், கிட்டுவுக்கு வீரஅஞ்சலி செலுத்துவதாகவும் பெரும் கோஷம் எழுப்பிய வண்ணம் சென்றதாம். இதன் போதே இந்த ஊர்வலம் மீது பொலிசார் கடும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டபோது அதில் கலந்து கொண்ட பலர் படுகாயமடைந்தனர். சிலர் ஆபத்தான நிலையிலுள்ளனராம். (சி-வி-ரி)

## ஆசிரியர்களுக்கான

# சம்பள கட்டுநிதி நேற்று வந்தது

(திருநெல்வேலி)

ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கான கட்டுநிதி நேற்று வந்து சேர்ந்தது.

இம்மாதம் 20ம் திகதி வழங்கப்படும் சம்பளம் இக்கட்டுநிதி அறிவித்தல் வந்து சேராததால் நேற்று வரை வழங்கப்படாமல் இருந்தது.

இதற்கான அறிவித்தலைக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த வடபிரதேசக் கல்விப் பணிப்பாளர் ஆர் சுந்தரலிங்கம் எடுத்து வந்துள்ளார். இதையடுத்து இன்று முதல் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (157)

# எழுதுவினைஞர் பரீட்சை வினாத்தாள் வந்தது

(நல்லூர்)

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கும் எழுதுவினைஞர் பரீட்சைக்கான வினாத்தாள்களும், எழுதுதாள்களும் அனுமதி அட்டைகளும் நேற்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டது.

இவற்றை எடுத்துவந்த கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கமும், கல்வித்திணைக்கள உயரதிகாரிகளும் இரு நாட்களின் பின்னர் பலாலியிலிருந்து இவற்றை எடுத்துவந்தனர்

மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டதாகவும் அவற்றை இன்று விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. [157-158-160-159-சி]

## ★ புலமைப்பரிசில், ஆங்கில ஆசிரியர்

# பரீட்சை முடிவுகள் எடுத்துவரப்படவில்லை

(நல்லூர்)

புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள், உதவி ஆங்கில ஆசிரியர் பரீட்சை முடிவுகள் நேற்று யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படவில்லை பெருமளவு பரீட்சார்த்திகள் இப் பரீட்சை முடிவுகளை எதிர் பார்த்திருந்த போதிலும் கல்விப் பணிப்பாளரால் அவை எடுத்துவரப்படவில்லை. இந்த இரண்டு பரீட்சைகளும்விசேட பரீட்சை என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று கல்விப்பணிப்பாளரால் எடுத்துவரப்பட்ட எழுதுவினைஞர்பரீட்சை வினாத்தாள்கள், அனுமதி அட்டைகள், எழுதுதாள்கள் என்பன நனைந்த நிலையிலேயே வந்தடைந்துள்ளது. கடல் கொந்தளிப்பு காரணமாகவே பருத்தித்துறை நோக்கி குமாரி மூலம் வரும்போதே இவை நனைந்ததாகவும் கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (157 158-சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Nnmber B/10336/B